இயலாது என்று சொல்லியிருக்கின்றீர்கள்; எதிர்காலத்தில் முடியும் என்ற நம்பிக்கையோடு தங்களுக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்பூங்கா அமைகிற நேரத்தில் அங்கே உரிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்கும். இப்போது, SIDCO மூலமாக அருகிலிருக்கக்கூடிய ராஜபாளையத்திலும் ஒரு தொழிற்பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பினைச் செய்திருக்கிறார்கள். ராஜபாளையம் சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய திருவேங்கடம், கரிவலம்வந்தநல்லூர், சங்கரன்கோவில் போன்ற பகுதிகளும் நிச்சயமாக அதிலே பயன்பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, தொழிற்பூங்கா ஒன்று அங்கே ஏற்படுத்தக்கூடியபட்சத்தில், தொடர்ச்சியாக வரக்கூடிய தொழிற்சாலைகளில் முதலீடு செய்யக்கூடிய முதலீட்டாளர்கள் யாரேனும் நிச்சயமாக முன்வருவார்களென்று சொன்னால், அவர்களுக்கு உரிய ஊக்குவிப்பினை அளித்து, அங்கே தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

126—

கால்நடை மருத்துவமனை

***9737—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், செம்பேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், செம்பேடு கிராமத்தில் நேரடியாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று சொல்லாத மனம் படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெறக்கூடிய ஆட்சி, இந்த ஆட்சி. அப்படிப்பட்ட ஆட்சியில் இப்போது 5,000 கால்நடைகளும், 5 கிலோ மீட்டருக்கும் அதிகமான சுற்றுப்புறமும் இருந்தால், அங்கே கிளை மருந்தகம் அமைக்கலாம் என்று சட்டம் சொல்கிறது. அந்த அடிப்படையில் எல்லாபுரம் ஒன்றியம், செம்பேடு கிராமத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக ஒரு கால்நடை மருந்தகத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் வரன்முறைகளின்படி, நேரடியாகக் கால்நடை மருத்துவமனை துவக்க இயலாது. முதலில், அந்தப் பகுதியில் 3,000 கால்நடை அலகுகள் இருக்கும்பட்சத்தில், அங்கே கால்நடை கிளை நிலையம் துவக்கவும், அந்தக் கிளை நிலையம் சுமார் 30 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சை வழங்கும்பட்சத்தில், அந்தப் பகுதியில் 5,000 கால்நடை அலகுகள் இருக்கும்பட்சத்தில், அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தவும், அவ்வாறு தரமுயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகம் தினமும் 40 கால்நடைகளுக்குக் குறையாமல் சிகிச்சை வழங்கும்பட்சத்தில், அந்த மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தவும் அரசின் வரன்முறைகளின்படி சாத்தியமாகும். ஆகவே, கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளியூர் என்பது கொசஸ்தலை ஆற்றை ஒட்டி இருக்கக்கூடிய கிராமம். மிகப் பெரிய அளவில் விவசாயத்தை சார்ந்திருக்கக்கூடிய அந்தக் கிராமத்தில் 40 ஆண்டுக் காலமாக கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனையானது சிதிலமடைந்து இப்போது பொதுப் பணித் துறையினால் தகுதியற்றது என்று சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையில் ரூ.16 கோடிக்கு கால்நடை மருந்தகங்கள், கட்டடங்கள் கட்டித் தரப்படும் என அறிவித்திருக்கிறார்கள். அதில் வெள்ளியூர் கிராமத்தில் ஒரு மருந்தகக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இடத்தைத் துறையின்மூலம் ஆய்வு செய்து, புதிதாக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற இடத்தில், அந்தக் கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

இலவச மின் இணைப்பு

***59172—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—